ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2157/5 - 2020 ජනවාරි මස 06 වැනි සඳුදා - 2020.01.06

*2157/5 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 44(1) ஆவது சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட சுற்றுலா மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சருக்கான விடயத்துறைகள் மற்றும் அலுவல்களை ஒப்படைத்தல் சம்பந்தமாக இங்கு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென அரசியல் யாப்பின் 44(5) ஆவது சட்டத்தின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறேன்.

பிரசன்ன ரணதுங்க,
சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர்.

*2019, திசெம்பர் 31.*

**அட்டவணை**

***கௌரவ அருந்திக பர்னாந்து, சுற்றுலா மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I* கடமைகளும் பணிகளும் | *நிரல் II* திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும் | *நிரல் III* நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. இலங்கையின் சுயரூபத்தை எடுத்துக் காட்டும் வகையில் தேசியக் கொள்கைகளுக்கு அமைவாக சுற்றுலாத்துறைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தலும் உயர்நிலைக்கு மேம்படுத்தலும் | 1. இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | • சுற்றுலாத்துறைச் சட்டம் (2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) |
| | 2. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | |
| | 3. இலங்கைச் சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | |
| 2. சுற்றுலாத்துறை முகவராண்மைகளின் பதிவும் ஒழுங்குறுத்துகையும் | 4. இலங்கைக் கண்காட்சி மற்றும் சம்மேளனப் பணியகம் | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***கௌரவ அருந்திக பர்னாந்து, சுற்றுலா மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I* *கடமைகளும் பணிகளும்* | *நிரல் II* *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III* *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| --- | --- | --- |
| 3. இலங்கையின் உயிரியல் பல்லினத்தன்மை, பெருமைமிகு வரலாறு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட உரிமைகள், சூழல் காலநிலை பல்லினத்தன்மை, கடல், கரையோர வளங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு விசேடமான உல்லாசப்புரியாகச் சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகள் மற்றும் உல்லாச விடுதிகளுக்கான வசதிகளை வழங்குதல், சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஹோட்டல் வசதிகள், விமான மற்றும் கடல் பயண வசதிகளை மேம்படுத்தல். | | |

*01-531*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.